DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.158/2023**

Deposition of witness for Prosecution அ.சா.1

Name : நித்யா
Father/ Husband Name : தர்மலிங்கம்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரிகள் ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 07.07.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தேவகோட்டையில் குடியிருந்து ஆசிரியராக வேலை செய்கிறேன். கடந்த 18.06.2016ம் தேதி என் அம்மா வீட்டிற்கு சென்று விட்டு மீண்டும் 20.06.2016ம் தேதி மாலை பள்ளி முடிந்து வீட்டிற்கு வந்து பார்த்த போது முன்பக்க வீட்டின் கதவு திறந்திருந்தது. உள்ளே போய் பார்த்த போது பின்பக்க கதவும் திறந்திருந்தது. பெட் ரூம் கதவும் திறந்து உடைகள் எல்லாம் கிழே கிடந்தது. பீரோவை திறந்த போது அதில் உள்ள தாலி பொட்டு 4, பூ போட்ட டாலர் -2கிராம், சிறிய வளைய தோடு ஜோடி-1, பெரிய வளைய தோடு ஜோடி-1, 2 சிறிய மோதிரங்கள், தாஜ்மஹால் தோடு 1-ஜோடி, கல் தோடு 1-ஜோடி, வெள்ளி குங்கும சிமில்-1, வெள்ளி அருனாக்கயிறு -1 ஆகியவைகள் காணாமல் போயிருந்தது.

2. பின்னர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி புகார் மனு அ.சா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** காணாமல் போன பொருட்களை நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள தங்க நகைகளை தான் நான் நீதிமன்றத்திடம் இருந்து திரும்ப பெற்றுச் சென்றேன். **(மேற்படி புகைப்படம் மற்றும் குறுந்தகடு அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

என் வீட்டில் சரியாக எத்தனை மணிக்கு, எந்த தேதியில் யார் திருடினார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.